செய்தி வெளியீடு எண். 411 நாள். 24.7.09

## செய்தி வெளியீடு – 24.7.2009

## நாமக்கல் மாவட்டத்தில் தனியார் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்தில் உயிரிழந்த 17 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 17 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி !

# முதலமைச்சர் கலைஞர் ஆணை !

நாமக்கல் மாவட்டம் வளையபட்டி கிராமம் அருகே அமைந்துள்ள வைகை எம்.பி.அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் என்னும் தனியார் தொழிற்சாலையில் அண்மையில் ஏற்பட்ட தீவிபத்தில் 17 தொழிலாளர்கள் உயிரிழந்த சம்பவம் குறித்த விவரம் தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து, மிகுந்த வேதனையடைந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அவர்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 17 இலட்ச ரூபாய் நிவாரண உதவியாக வழங்கிட இன்று (24.7.2009) ஆணையிட்டுள்ளார்.

* * * * *

**வெளியீடு** : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9